Registered as a news paper in Ceylon

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 4 | மட்டக்களப்பு | மார்கழி – 1972 | விலை 30 | இதழ் 12 |
|---|---|---|---|---|

## நத்தால் கூறும் புரட்சி

[எம். லெனாட், அம்பிட்டியா]

யூத சரித்திரத்திலே ஒரு மறுமலர்ச்சி. சமயத்தலைவர்கள் மத்தியிலே புரட்சி. கடவுளின் மக்கள் மனதிலே புத்துணர்ச்சி. யூதத் தலைவர்கள் நடுவே திகைப்புணர்ச்சி. பாவியோடு பரமனுறவாட வந்த அதிசய நிகழ்ச்சி. மூட நம்பிக்கையால் மூடிக்கிடந்த சமுதாயத்திலேயுண்டான மறுமலர்ச்சி. இருள் நிறைந்த பூவுலகிற்கு ஒளியூட்ட, வழிகாட்ட, விண்ணுலகை விட்டு, மண்ணுலகேகிய மன்னனின் பிறப்பு நிகழ்ச்சி. ஆம்! இதுதான் நத்தால் பெருநாளின் வரலாறு.

நாடு முன்னேற, வல்லரசுகள் பலம்பெற, உலகம் நாகரீக பாதையில் நடைபோட புத்துணர்ச்சி, அதன் வழி வந்த புரட்சி மறுமலர்ச்சி என்பன அவசியம் என்பது உலக வரலாறு எடுத்தயம்பும் உண்மை. நத்தால் பெருநாளும் உறங்கிக் கிடந்த உலகிற்கு உணர்ச்சியூட்ட உருவான பெருநாளெனின் மிகையாகாது. அதுமட்டுமல்ல! விண்ணுலக மன்னன் மண்ணுலகை மீட்கவந்த மகிழ்ச்சிநிறை நிகழ்ச்சியும் கூட.



மன்னன் ஏழையாய் அவதரிப்பது ஒரு அதிசயம். மானிடன் மாட்டுக்குடிலிற் பிறப்பது ஒரு விந்தை. ஆனால், இந்தப் புரட்சியும் மறுமலர்ச்சியும் உலகவரலாறு கூறும் புரட்சிகளுக்கெல்லாம் மேம்பட்டது, புறநடையானது. ஆனால், மனச்சாட்சி மழுங்கிப்போயிருந்த அன்றைய சமுதாயம் இவற்றை அறிந்து கொள்ளமுடியாத, ஏற்றுக்கொள்ள முடியாத நிலை. ஆதியிலே இறைவன் வாக்குப்பண்ணிய "மெசியா" சூரப்புலியாய் வில்வேந்தனாய் உதிப்பாரென எதிர்பார்த்திருந்தனர். தாவீதின் கோத்திரத்தை ஆளவந்தமீட்பர், பரம ஏழையாய்ப் பிறந்தபொழுதிலும், புரட்சி வீரனாய். சமாதானத்தின் மன்னனாய்த் திகழ்வாரென்பது அவர்கள் கேட்டிராத புதிர்.

(5ம் பக்கம் பார்க்கவும்)

"திருச்சட்டத்தை அழிக்கவல்ல... நிறைவேற்றவே வந்தேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## (39) குருத்துவம் என்னும் திருவருட் சாதனம்.

**3. குருத்துவப் பட்டங்களையளிக்கும் திருச்சடங்குகளின் சீரமைப்பு.**

குருத்துவப் பட்டங்கள் எப்போதும் பூசைப்பலியின்போதே அளிக்கப்பட்டு வந்துள்ளன. குருத்துவப் பட்டங்களை அளிக்கும் சடங்குகள், அவைகளின் இயல்பையும் வேற்றுமையையும் போதிய அளவுக்குக் காண்பித்தன. எனினும், 2ம் வத்திக்கான் பொதுச் சங்கம், ஆயர்கள், குருக்கள், திருத்தொண்டர்கள் பற்றியும், குருத்துவ திருவருட்சாதனத்தின் இயல்பு, விளைவுகள் பற்றியும் மிகத் தெளிவாகப் படிப்பித்தபடியால், இப்படிப்பினைகள்குருத்துவப்பட்டங்களையளிக்கும்சடங்குகளில் இடம்பெறவேண்டியிருந்தன. ஏனெனில், கிறிஸ்தவ மக்கள் குருத்துவ திருவருட்சாதனச் சடங்குகளில் தங்களால் இயன்ற அளவில், அவைகளை எளிதாய்ப் புரிந்து கொண்டு, முழுமையாகவும், செயல் முறையிலும், சமூகத்திற்குரிய விதத்திலும் பங்கு கொள்ள வேண்டுமாயின், வாசகங்களும் சடங்குகளும் தாம் குறித்துக் காட்டும் புனிதக் காரியங்களை மிகத் தெளிவாக விளக்க வேண்டும். (இறைபணி இ. 21) இதனிமித்தமே ''குருத்துவப் பட்டங்கள் வழங்குவதற்கான சடங்குகளையும் வாசகங்களையும் திருத்தியமைக்கவேண்டும்'' என்று 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் சட்டம் விதித்தது (இறைபணி இ. 67). ஆயர் திருநிலைப்பாட்டின் போது தலைமீது கைகளை வைக்கும் சடங்கு சமுகமாயிருக்கும் ஆயர்கள் அனைவராலும் நிறைவேற்றப்படலாம் என்றும் சங்கம் கூறியது (இறைபணி இ, 76).

இவ் ஒழுங்குகளையும் சங்கத்தின் படிப்பினைகளையும் தழுவி, குருத்துவப் பட்டங்களையளிக்கும் சடங்கு முறைகள் இறைவழிபாட்டுப் பரிபாலன சபையினுல், நிபுணர்களின் உதவியோடும் உலகின் பல்வேறு பாகங்களிலுள்ள ஆயர்களின் ஆலோசனையோடும், திருத்தியமைக்கப்பெற்று, பரிசுத்த பாப்பரசரின் அங்கீகாரத்தோடு வெளியிடப்பட்டுள்ளன. இச் சீரமைப்பில் இத்திருவருட்சாதனத்தின் விளைவுகள் இலகுவாய்த் தோன்றும் பொருட்டும், திருச்சபையின் படிப்பினைகள் தெளிவாக அறியப்படும்படியும், திருச்சடங்கு முந்திய முழுமையை மீண்டும் அடையும்படியும், செபங்களிலும் சடங்குகளிலும் வாசகங்களிலும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

திருத்தொண்டர் பட்டமளிக்கும் திருச்சடங்கு முறையில் அதிக மாற்றங்கள் செய்யப்படவில்லை. ஆனுல், 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் விளைவாகத் திருத்தொண்டர் நிலை திருச்சபையின் அதிகாரஅமைப்புக்கே உரிய ஒரு நிலையான பதவியாகத் திரும்பவும் அமைக்கப்பட்டுள்ளபடியால் (திருச்சபை இ. 29; திருத்தொண்டர் பட்டம்பற்றி 6வது சின்னப்பர் 1967ல் விடுத்த ஆணைப் பத்திரம் காண்க), இம் மாற்றத்திற்கேற்ப திருச்சடங்கு முறையில் சில திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

குருப்பட்டமளிக்கும் திருச்சடங்கு முறையின் எல்லாப் பாகங்களுக்கும் இடையில் கூடுதலான ஒற்றுமை இருக்கும்படியும், கைகளைத் தலைமேல் வைத்தலும் திருநிலைப்பாட்டிற்குரிய வார்த்தைகளைச் சொல்லுவதும் தான் திருச்சடங்கின் மிக முக்கிய பாகம் என்பதை மிகத் தெளிவாகக் காட்டும்படியும் திருச்சடங்கு முறை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

ஆயர் பட்டமளிக்கும் திருச்சடங்கு முறை 2ம் வத்திக்கான் பொதுச்சங்கத்தின் ஆயர் நிலை, பணி, கடமைகள் பற்றிய தெளிவான படிப்பினைகளுக்கேற்பத் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. ஆயர்களுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டிப்பாகக் காட்டும் பொருட்டு, 3ம் நூற்றுண்டில் உரோமையில் எழுதப்பெற்ற **கிப்போலிற்றசின் அப்போஸ்தல பாரம்பரியம்** என்னும்

(3ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச்...

[2ம் பக்கத் தொடர்ச்சி]

நூலிலிருந்து எடுக்கப்பட்ட வார்த்தைகள் திருநிலைப்பாட்டிற்குரிய மாத்திரையாகக் குறிக்கப்பட்டுள்ளன. இவ்வார்த்தைகளே சில கீழைதேசத்திருச்சபைகளின்ஆயர்பட்டமளிக்கும் திருச்சடங்கில் இன்றும் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. இவ்வாறு, அப்போஸ் தலர்களிடமிருந்து வரும் ஆயர் நிலைக்கு கீழைதேச பாரம்பரியமும் மேலைத்தேச பாரம் பரியமும் ஒத்துச் சான்று பகருகின்றன என் பது ஆயர் பட்டமளிக்கும் திருச்சடங்கு வழியாகப் புலப்படும். திருத்தியமைக்கப் பெற்ற திருச்சடங்கு முறைப்படி, திருச்சடங் கின்போது சமுகமாயிருக்கும் ஆயர்கள் எல் லாரும் கைகளை வைக்கும் சடங்கில் பங்கு கொள்வதுடன், திருநிலைப்பாட்டிற்குரிய மாத்திரையையும் பட்டமளிக்கும் பிரதம ஆயருடன் சொல்வார்கள்.

பரிசுத்த தந்தை 12ம் பத்திநாதர், 1947ல் வெளியிட்ட ''குருத்துவ திருவருட் சாதனத்தின்'' என்னும் கொள்கைத் திரட் டினுல் குருத்துவப் பட்டங்களுக்குரிய பொரு ளையும் மாத்திரையையும் தீர்மானித்துப் பின் வருமாறு அறிவித்திருந்தார். ,,திருத்தொண் டர், குரு, ஆயர் ஆகிய நிலைகளுக்குரிய திருப் பட்டங்களுக்குரிய ஒரே பொருள் கைகளை வைக்கும் சடங்காகும். அதே பிரகாரம் அப் பட்டங்களுக்குரிய ஒரே மாத்திரை அப் பொருளை விளக்கும் வார்த்தைகளாகும், அதாவது திருவருட்சாதனத்தின் விளைவுக ளாகிய பட்டத்தின் ஆற்றலையும் பரிசுத்த ஆவியின் அருளையும் சுட்டிக்காட்டுவனவாகத் திருச்சபையால் ஏற்றுப் பயன்படுத்தப்பட்டு வரும் வார்த்தைகளாகும்.'' திருப்பட்டங்க ளுக்குரிய திருச்சடங்கு முறைகள் இப்போது திருத்தியமைக்கப்பட்டபடியால் அப் பட்டங் களைக் குறித்து எவ்வித ஐயமும் ஏற்படா வண்ணம், பரிசுத்த தந்தை 6வது சின்னப்பர் அவைகளின் பெறுமதிக்கு அவசியமான பொருளையும் மாத்திரையையும் புதிதாகத் தீர்மானித்து வெளியிட்டுள்ளார். அவை வருமாறு:

திருத்தொண்டர் பட்டத்திற்குரிய பொருள், திருநிலைப்பாட்டுச் செபத்திற்குமுன் பட்டம் பெறவிருக்கும் ஒவ்வொருவரது தலை மீதும் ஆயர் மௌனமாய்க் கைகளைவைக்கும் சடங்காகும். பட்டத்தின் பெறுமதிக்கு அவ சியமான மாத்திரை, திருநிலைப்பாட்டுச் செபத்தில் காணப்படும் பின்வரும் வார்த்தை களாகும்: ''ஆண்டவரே, இவர்கள் மீது பரி சுத்த ஆவியை அனுப்பியருளும். இதனுல் இவர்கள் தம் திருப்பணியைக் கடமை தவரு மல் நிறைவேற்ற உம் ஏழு அருட்கொடைக ளால் உறுதிபெற வேண்டுமென்று உம்மை மன்ருடுகிறேம்.''

குருப்பட்டத்திற்குரிய பொருள், திரு நிலைப்பாட்டுச் செபத்திற்குமுன் பட்டம் பெற விருக்கும் ஒவ்வொருவருடைய தலைமீதும் ஆயர் மௌனமாய்க் கைகளை வைக்கும் சடங் காகும். பட்டத்தின் பெறுமதிக்கு அவசிய மான மாத்திரை, திருநிலைப்பாட்டுச் செபத் தில் காணப்படும் பின்வரும் வார்த்தைகளா கும்: ''எல்லாம்வல்ல தந்தையே, உம் அடி யார் இவர்களுக்குக் குருத்துவப் பதவியை அளித்தருள உம்மை மன்ருடுகிறேம். இவர் களுடைய உள்ளங்களில் புனிதத்தின் ஆவி யைப் புதுப்பித்தருளும். இறைவா, உமது அருளினுல் குருத்துவத்தின் இரண்டாவது நிலையை இவர்கள் பெறுவார்களாக; தங்கள் வாழ்க்கையின் மாதிரியால் நன்னடத்தைக் குத் தூண்டுதலாகவும் இருப்பார்களாக.''

ஆயர் பட்டத்திற்குரிய பொருள், திரு நிலைப்பாட்டுச் செபத்திற்கு முன் பட்டம் பெறவிருப்பவரின் தலைமீது பட்டமளிக்கும் ஆயர்கள் அல்லது பிரதம ஆயர் மௌன மாய்க் கைகளை வைக்கும் சடங்காகும். பட் டத்தின் பெறுமதிக்கு அவசியமான மாத்திரை திருநிலைப்பாட்டுச் செபத்தில் காணப்படும் பின்வரும் வார்த்தைகளாகும்: ''உம்மிட மிருந்து புறப்படும் ஆற்றலாகிய பரிசுத்த ஆவியைத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர் மீது இப்போது பொழிந்தருளும். முழு நிறை வான இந்த ஆவியையே உன் அன்பு மகன் இயேசுக்கிறிஸ்துவுக்கு அளித்தீர். அவரும் அதே ஆவியைப் புனித அப்போஸ்தவர்களுக்கு அருள, அவர்கள் உம் பெயருக்கு என்றும் புகழ்ச்சியும் மாட்சியும் அளிக்கும் திருத்தல மாக ஒவ்வோரிடத்திலும் ஆங்காங்கு திருச் சபையை ஏற்படுத்தினுர்கள்.'' (6வது சின் னப்பர் 1968ல் வெளியிட்ட ''மறை ஆய ருக்குரிய திருச்சடங்கு நூலின் சீரமைப்பு'' என்னும் கொள்கைத்திரட்டு காண்க)

**4. குருத்துவப் பட்டங்களை அளிக்கும் திருச் சடங்குகளுக்குரிய புதிய ஒழுங்கு முறை.**

திருத்தொண்டர், குரு, ஆயர் என்போ ருக்குரிய திருப்பட்டங்கள் பூசைப்பலியில் சுவிசேஷம் வாசிக்கப்பட்டபின்பே அளிக்கப்

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச்...

[3ம் பக்கத் தொடர்ச்சி]

படுகின்றன. இப்பட்டங்களை அளித்தற்குரிய திருச்சடங்கு முறைகள் பின்வரும் பிரிவுகளை அடக்கியுள்ளன: 1. பட்டம் பெறவிருப்பவர்களின் தகைமையை விசாரித்தல் 2. பட்டமளிக்கும் ஆயரின் திருவுரை. 3. பட்டம் பெறவிருப்பவர்களின் பரிசோதனையும், வாக்குறுதிகளும். 4. புனிதர்களின் பிரார்த்தனை. 5. திருநிலைப்படுத்தும் திருச்சடங்கு 6. பரிமள தைலத்தால் பூசுதலும், பதவிக்கும் பணிக்கும் உரிய பொருள்களை வழங்குதலும், என்பனவாம். இவை ஒவ்வொன்றைப்பற்றியும் சில குறிப்புகள் கூறுவாம்.

1. பட்டம் பெறவிருப்பவர்களின் தகைமையை விசாரித்தல்

திருத்தொண்டர், குருக்கள் ஆயர்கள் ஆகிய இவர்கள் இறைமக்களுக்கும் இறைவனுக்கும் பணி யாற்றவேண்டியவர்கள். ஆகையால், அந் நிலைகளுக்கு உயர்த்தப்படவிருப்பவர்களின் தகைமையை இறை மக்கள் முன்னிலையில் பிரசித்தமாய் விசாரித்தல் மிகவும் பொருத்தமானதாகும், ஆயர் பதவிக்கு உயர்த்தப்பட இருப்பவரின் தகைமையை விசாரிப்பதற்குப் பதிலாக, பரிசுத்த பாப்புவிடமிருந்து அவருக்குக் கிடைத்துள்ள நியமனப் பத்திரம் வாசிக்கப்படும்.

2. பட்டமளிக்கும் ஆயரின் திருவுரை:

முதலில் ஆயர் அளிக்கப்படவிருக்கும் திருப்பட்டத்தைப்பற்றியும், அதைப்பெறுபவர்கள் ஆற்றவேண்டிய பணிகளைப்பற்றியும் இறை மக்களுக்கு விளக்கிக் கூறுவார். பின்பு, அத் திருப்பட்டத்தைப் பெறுபவர்கள் தமக்குரிய பணிகளை எவ்வாறு செய்ய வேண்டுமென்று ஆயர் அவர்கட்குப் புத்திமதிகள் கூறுவார்.

3. பட்டம் பெறவிருப்பவர்களின் பரிசோதனையும் வாக்குறுதிகளும்.

பட்டம் பெறப்போகிறவர்கள் அப் பட்டத்திற்குரிய பணிகளைப் பிரமாணிக்கமாய் நிறைவேற்ற மனமுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிக்கையிடும் பொருட்டு இப் பரிசோதனை நடைபெறுகின்றது. பின்பு, அவர்கள் தமது ஆயருக்கு அல்லது மேல் அதிகாரிக்கு வணக்கமும் கீழ்ப்படிவும் செலுத்துவதாக வாக்களிக்கின்றனர்.

4. புனிதர்களின் பிரார்த்தனை.

பட்டம் பெறப்போகிறவர்களுக்காக புனிதர்களின் பிரார்த்தனை பாடப்படும் அல்லது சொல்லப்படும். அவ்வேளை அவர்கள் தங்களை இறைவனின் பணிக்கு முற்றுகக் கையளிக்கிறார்களென்பதைக் காட்ட, முகங்குப்புறக் கிடப்பர். புனிதர்களின் பிரார்த்தனையில் மறைமாவட்டத்தின், ஆலயத்தின், பட்டம் பெறுகிறவர்களின் புனித பாதுகாவலர்களின் பெயர்களையும் பொருத்தமான இடங்களில் சேர்த்துக்கொள்ளலாம். இவ்வாறு, பட்டமளிக்கும் திருச்சடங்கில் முழுத் திருச்சபையும் நெருங்கிய முறையில் பங்கு கொள்கின்றது.

5. திருநிலைப்படுத்தும் திருச்சடங்கு.

இதுவே பட்டமளிக்கும் திருச்சடங்கின் மிக முக்கிய கட்டம். ஆயர், பட்டம் பெறப்போகும் ஒவ்வொருவரின் தலைமீதும் தனித்தனியே தமது கைகளை மௌனமாய் விரித்து வைத்தபின் திருநிலைப்பாட்டிற்குரிய நீண்ட செபத்தைப் பாடுவார் அல்லது சொல்லுவார். இச் செபத்தில்தான் பட்டத்தின் பெறுமதிக்குரிய மாத்திரையும் உண்டு. குருப்பட்டம் அளிக்கும் திருச்சடங்கில் ஆயர் தமது கைகளை விரித்து வைத்தபின், கிறிஸ்தவ குருத்துவத்தின் ஒருமைப்பாட்டைத் தெளிவாகக்காட்டும் பொருட்டு, அங்கு சமுகமாயிருக்கும் குருக்கள் எல்லாரும் பட்டம் பெறுபவர்களின் தலை மீது தங்கள் கைகளை விரித்து வைப்பர். ஆயர் பட்டம் அளிக்கும் திருச்சடங்கில், சமுகமாயிருக்கும் எல்லா ஆயர்களும் பட்டம் பெறுபவரின் தலைமீது தங்கள் கைகளை விரித்து வைப்பதுடன், திருநிலைப்பாட்டிற்குரிய மாத்திரையையும் பிரதம ஆயருடன் சொல்லுவர்

6. பரிமள தைலத்தால் பூசுதலும், பதவிக்கும் பணிக்குமுரிய பொருள்களை வழங்குதலும்.

புதிதாகப் பட்டம் பெற்ற திருத்தொண்டர்கள் செய்யவேண்டிய போதகப் பணியின் அடையாளமாக அவர்கட்கு நற்செய்தி ஏடு வழங்கப்படுகிறது. புதிதாகக் குருப்பட்டம் பெற்றவர்களுக்குக் கிறிஸ்தவ மக்களை அர்ச்சிக்கும் வல்லமை உண்டென்று காட்டும் பொருட்டு அவர்கள் கைகள் பரிமள தைலத்தால் பூசப்படுகின்றன. இறைமக்கள் பெயரால் இறைவனுக்குத் திருப்பலி ஒப்புக்கொடுக்க அவர்கட்கு அதிகாரம் உண்டென்று

(5ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நத்தார் கூறும் புரட்சி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாமரனாய்ப் பிறந்த பொழுதிலும் தனது ஏகாதிபத்தியத்தை முறியடிக்கப் பிறந்து விட்டான் மன்னன், என்று திகைப்படைகிறான் ஏரோதன். புரட்சியை வேரோடு களைந்தெறிய ஆணை பிறப்பிக்கிறான். ஆயினும் அந்தோ! வல்லமை மிக்கவர் அந்தத் தெய்வீகக் குழந்தையைக் காப்பாற்றுவார் என்பதை அறிந்தானில்லை. இது அவன் கண்ட ஏமாற்றம். கிறிஸ்து தன் பகிரங்க வாழ்வை ஆரம்பிக்கு முன்னரே 12 வயதில் வேதபாரகரைத் திகைப்படையச் செய்கிறார். இறைமகன் இவ்வுலக மீட்பர், உண்மையை எடுத்துரைக்க வந்த உன்னதர், புரட்சித் தலைவனாகவே தோன்றுகிறார்.

இன்றைய புரட்சி வீரரில் பலர் வீண் பெருமை விரும்பி, தன்னலங் கதிரு, புரட்சி வேண்டும், மறுமலர்ச்சி வேண்டுமென்று வீண் வார்த்தைகளைப் பொழிகின்றனர். இதற்கு மாறாகக் கிறிஸ்து, ''தாழ்மையைக் கடைப்பிடி முத்தியடைவாய்'' என்று சொல்லாமல் சொல்லுகிறார். பரிசேயரின், வேதபாரகரின் மூடக் கொள்கைகளைக் கண்டிக்கிறார். சட்டத்தை நிறைவேற்ற வந்தவர், அழிக்கவந்தவராகக் கருதப்பட்டு கழுமரம் ஏறுகிறார். இந்தப் புரட்சியின் ஆரம்ப விழாவைக் கொண்டாடும் நாம் இந்நன்னாளிலே சிந்திக்கவேண்டியதென்ன ?

நாம் கிறிஸ்தவர்கள். எம்மை மீட்க இவ்வுலகிற்கு வந்த அண்ணல் கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள் மட்டுமன்று, அவரே எமது கடைசிக் கதியென நம்பியிருப்பவர்கள். மழுங்கிப்போயிருக்கும் எமது மனச்சாட்சியை தொழிற்படச்செய்ய, எமது ஆன்ம வாழ்விலும், புரற்சியேற்பட, மறுமலர்ச்சி காண எமது இதயக் கதவுகளைத் திறந்துவிடல் அவசியம்.

இன்றைய அரசியல் மேதைகளைப் போலன்றி, உண்மையான மறுமலர்ச்சி காண விரும்புகிறோமா? பொறாமை, வஞ்சகம் நிறைந்த எம் இதயத்தை பாலகன் இயேசுவின் அருளால் பிறரன்பு நிறைந்ததாக மாற்ற விரும்புகிறோமா? புரட்சி வீரனின் தாழ்ச்சி எனும் புண்ணியத்தைக் கடைப்பிடிக்கிறோமா? ஒளியின் மக்கள் எனும் பெயருக்கேற்ப எமது நடையிலே, சொல்லிலே, செயலிலே, உடையிலே உண்மை ஒளியை உலகிற்குப் பரப்புகிறோமா? நாம் கூடி உண்டு குடித்துக்களிக்கும் இந்நன்னாளிலே வயிற்றுப்பசியை நிரப்ப வழியின்றி, வானமே கூரையென வாழும் எம் அயலாரைப்பற்றிச் சிந்திக்கிறோமா? வாழ்வில் ஒளி காட்ட, வழி நடத்த வையகத்துதித்த வள்ளலின் அடிச்சுவட்டைப் பின்பற்றி, எமது நாட்டிலே, சமுதாயத்திலே, பங்கிலே நிகழும் அநீதிகளை ஒழித்துக்கட்ட அயராதுழைக்கிறோமா? அன்றேல், நாம் விண்வீட்டை நோக்கிப்பயணஞ்செய்யும் யாத்ரீகர் என்பதை மறந்து, மண்ணிலே, பெண்ணிலே பொன்னிலே நிம்மதி காண விழைகிறோமா ?

''எங்கே நிம்மதி, எங்கே நிம்மதி,

அங்கே எனக்கோர் இடம் வேண்டும்''

என்றார் ஒரு கவிஞர். ஆம், நாம் தேடுவது நிம்மதி. அதை அளிக்கவே பாலகன் இயேசு நம் புரட்சிவீரன் இப்பாரினிலே அவதரித்தார். இதை நினைவு கூரும் இந்நன்னாளிலே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எம் மனக் கண் முன் இருத்துதல் அவசியம்.

இத்தனைகாலம் கிறிஸ்துவை, உண்மை ஒளியை, எமது சமுதாயத்திலே, நாட்டிலே பரப்புவதற்குத் தவறிய குற்றத்திற்காகப் பாலகன் இயேசுவின் பாதத்திலே வீழ்ந்து, தாழ்மையோடு மன்னிப்புக்கேட்போம். அன்றேல். அன்று பாமரனாய் உதித்த அதே கிறிஸ்து மங்கா மகிமையில் வீற்றிருக்கும் மாபரனாய்த் திரும்பி வரும் போது, அவர் எமக்காகத் தம் உயிரையே தியாகம் செய்து பெற்றுத் தந்த நித்திய வாழ்வை அடைய அபாத்திரர் ஆகிவிடுவோம். எனவே, பாவ இருள் போக்கப் பாரிலுதித்த புரட்சி வீரன பாலகன் இயேசுவின் அருளை வேண்டி நிற்போம், நிச்சயம் வெற்றி காண்போம்.

## இறைவழிபாட்டுச்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

காட்டும்பொருட்டு, அப்பமுள்ள தட்டும் இரசமுள்ள கிண்ணமும் அவர்கட்கு வழங்கப்படுகின்றன. புதிதாகப் பட்டம் பெற்ற ஆயர் ஞான வரங்களை நிறையப் பெற்றவர் என்பதைக்காட்டும்பொருட்டு அவரது தலை மரிமளதைலத்தால் பூசப்படுகிறது. பின்பு, அவரது பணிக்கும் அதிகாரத்திற்கும் அடையாளங்களான நற்செய்தி ஏடு, மோதிரம், ஆயர்கோல் என்னும் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

பட்டமளிக்கும் திருச்சடங்கு முடிந்ததும் நற்கருணை வழிபாடு வழமைபோல் நடைபெறும். அதில், பட்டம்பெற்றவர்கள் தங்கள் பட்டத்திற்குரிய முறையில் பங்கு பற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## நூல் விமர்சனம்

# "புரட்சிக் கிறிஸ்து"

### (தயாளம்)

நமது மறைமாவட்டத்தைச் சேர்ந்த, தற்பொழுது பச்சையப்பா கல்லூரியிற் பயின்றுவரும் **அருட்திரு. வே. அந்தனி ஜாண் அடிகளாரே** இந் நூலை இயற்றிய ஆசிரியர்.

நிலை மாறிக்கொண்டுவரும் இவ்வுலகு மனிதனுக்குத் திருப்தியை அளிக்காததன் காரணமாக, மனிதன் அத்திருப்தியை அளிக்க வல்ல மாற்றத்தை நாடி ஓடுகிறான். வெளியுலகம் விரைவாக மாறிக்கொண்டு வந்தாலும், மனிதனது மனம் முன்னேறவில்லை. இதன் காரணமாகத் தமது சூழ்நிலையில் முழுமையைக் காணாது விரக்தியடைந்த முதியவரும், நிறைவைத்தரும் மாற்றம் எங்கே எனப் பதறும் இளைஞரும் புரட்சியை விரும்புகின்றனர்.

இறைவன் ஒருவனே முழுமையான திருப்தியைக்கொடுக்க வல்லவன் என்பது உண்மையென்றாலும், விஞ்ஞானம், பொருளாதாரம் கலாச்சாரம் போன்ற இன்னோரன்ன துறைகளில் மனிதன் முன்னேறிக்கொண்டு போகும் இந்நாட்களில், இறைவன் இம் முன்னேற்றங்களுக்குப் பொருந்தாதவராக, நவநாகரீக உலகிற்கு அப்பாற்பட்டவராக, பழைமையானவராகக் காணப்படுகிறார். ஆனால், மனிதன் திருப்தியடைய வேண்டுமானால், விஞ்ஞானமோ, பொருளாதாரமோ, பிறரோ உதவிக்கு வரவேண்டியதில்லை என்பதை அறிவுறுத்தி, மனிதன் திருப்தியான வாழ்க்கை காண்பது எங்கே? எப்படி? எப்போ? எனும் கேள்விகளுக்கு விடையளிப்பதாக எழுந்துள்ளது அருட் திரு. அந்தனி ஜாண் அடிகளது ''புரட்சிக் கிறீஸ்து''

வரலாற்றிலே பல புரட்சிகள் நடந்துள்ளன. ஆனால், இவை ஓரிரு துறைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தாலும் மனிதன் விரும்பியவாறு அவன் சூழ்நிலையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தவில்லை. இற்றைக்கு ஏறக்குறைய இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னே இயேசுகிறீஸ்து பிறந்தார். அவரும் தமது சூழ் நிலையில் மாற்றம் காணவிரும்பி அதற்காகப் பாடுபட்டார். இவரது புரட்சியைப் பின்பற்றுகிறவர்கள், நிலையான மாற்றத்தை—அதனால் வரும் திருப்தியைப் பெறலாம், என்று ஆசிரியர் ''புரட்சிக் கிறீஸ்து'' விலே எடுத்துக்காட்டுகிறார். இதையேதான் அணிந்துரையில் அருட்திரு. வி. மி. ஞானப்பிரகாசம் அடிகளும்

> ''புரட்சிப்பசிகொண்ட பல்லாயிரம் உள்ளங்கள்
> வரட்சிக்கிடமான பொய்ப்புரட்சி ஒழித்து
> செழிப்பு நிலமான சேசுவின் புரட்சியை
> விழித்த கண்ணுடன் விழுங்கும் வாயுடன்
> ஏற்று நடப்பின் ஏற்றம் அடைவர்.''

என்று கூறுகின்றார்.

சூழ்நிலையில் மாற்றம் காண்பதென்றால் பல துறைகளிலும் திருப்பம் ஏற்படுத்துவதாகும். எனவே, கிறிஸ்துவின் புரட்சியைப் பல கோணங்களினின்றும் எடுத்தாராய்கின்றார் ஆசிரியர். பிறப்பிலே, இறப்பிலே, புரட்சி கண்டவர் கிறீஸ்து. ஆனால், விசேஷமானது அவர் வாழ்க்கையிற் கண்ட-காட்டிய புரட்சியாகும். இந்தப்புரட்சிகரமான வாழ்க்கையின் அடிப்படையை நாம் ஐந்தாம் அதிகாரத்திற் காண்கிறோம், ''கிறிஸ்துவின் மலைப்பொழிவு புரட்சி மிக்கது. துன்பத்திலே இன்பம் காணச்சொல்கிறார், இன்பத்தின் ஊற்றாகிய கிறிஸ்து. மனிதனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை, மனிதப்பண்பாட்டின் முரண் என்று கூட முழங்கினர்'' என்று கூறி மலைப்பொழிவு கிறிஸ்து நடத்திய புரட்சியின் போதனையாக உளது என்பதை எடுத்துக்காட்டும் ஆசிரியர் தொடர்ந்து, அன்பிலே, அதிகாரத்திலே, சேவையிலே, தொண்டிலே, வழி காட்டுதலிலே, போதனையிலே கிறிஸ்துவின் புரட்சியைக் காட்டுகிறார்.

கிறிஸ்துவின் போதனைகள் கடைப்பிடிக்கத் தக்கவையா என்று அங்கலாய்ப்பர் பலர். இவர்களுக்காகவேதான்போலும் ஆசிரியர், கிறிஸ்து தான் காட்டிய வழியில் எவ்வாறு வாழ்ந்துகாட்டினார் என்பதைஎடுத்துவிளக்குகிறார். கிறிஸ்து வழிகாட்டியாய் மாத்திரம் இருந்திருந்தால் இன்று கிறிஸ்தவம் தழைக்காது.

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வேதாகமத்தைப் படிப்போம்

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

## (9) திருச்சபையின் வாழ்வில் வேதாகமம்

திருச்சபையின் வாழ்வில் வேதாகமம் நடுநாயகமாக விளங்குகின்றது. திருச்சபை கிறீஸ்துவின் திரு உடலுக்கும் இரத்தத்திற்கும் தகுந்த வணக்கம் செலுத்துவதைப் போன்று, கடவுளின் வார்த்தையைக்கொண்டிருக்கும் வேதாகமத்திற்கும் தகுந்த வணக்கம் செலுத்துகின்றது. இறை வழிபாட்டில் பிரத்தியேக பாகம் கடவுளின் வார்த்தையை வாசிக்கக்கேட்பதற்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. பலிப்பூசையில் வாசிக்கப்படும் வாசகங்கள், வாக்கியங்கள், அனேகமாக வேதாகமத்திலிருந்தே எடுக்கப்பட்டிருக்கின்றன. எந்த அருட் சாதனத்தை நோக்கினுலும், அங்கே இறைவனின் வார்த்தைக்கு மிக முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளது. கடவுளின் வார்த்தை ஆக்கும் சக்திவாய்ந்தது.

விசுவாசிகள் யாவரும் வேதாகமத்தை நன்கு வாசித்துப் பயன்பெறவேண்டும் என்பதற்காக வேதாகமம் பல மொழிகளிலும், மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. நிபுணர்கள் தங்கள் அறிவுக் கூர்மையையும், ஆற்றலையும் வேதாகமத்தை ஆராய்ந்தறியப் பயன்படுத்தி தங்கள் படிப்புத்துறையில், மறுமலர்ச்சியைப் புகுத்த வேண்டுமென்று திருச்சபை விரும்புகின்றது. இறைவனின் வார்த்தையில் எவ்வித மாற்றமுமின்றி இறைமக்களுக்கு எக்காலமும் அளிப்பதுடன், இறைவாக்கினர், அப்போஸ்தலர்களின் படிப்பினையைக் கடைப்பிடித்து, தூய ஆவியின் குரலினை எதிரொலிக்கச் செய்கின்றது திருச்சபை.

இறைவனின் வார்த்தையை அடக்கியிருக்கும் வேதாகமத்தைப்பற்றி திருச்சபையின் சிறந்த எழுத்தாளர்கள் கொண்டிருக்கும் அபிப்பிராயமானது, திருச்சபையின் வாழ்வில் வேதாகமம் வகிக்கும் உன்னத இடத்தை எடுத்துக்காட்டுகின்றது.

''மறை நூலில் உள்ள இறைவாக்கு எதுவும் அவனவன் தரும் விளக்கத்திற்கு உட்படக்கூடியதன்று என்பதை நீங்கள் முதன் முதல் மனதில் வைக்கவேண்டும். ஏனெனில் இறைவாக்கு ஒருபோதும் மனிதரின் விருப்பத்தால் உண்டானதில்லை. மனிதர் பரிசுத்த ஆவியினுல் தூண்டடம்பட்டு, கடவுளின் ஏவுதலால் பேசினர்.'' (2 இரா 1, 20) ''அவர்கள் முன்னுரைத்தவையெல்லாம்; விண்ணின்று அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியால், நற்செய்தி அறிவிப்பவர்கள் வாயிலாக இப்பொழுது உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளன.''
(1 இரா 1, 12)

''மறைநூல் கிறீஸ்து இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தினுல், மீட்புக்கு அழைத்துச்செல்லக்கூடிய ஞானத்தை அளிக்கவல்லது. மறை நூலில் உள்ளதெல்லாம் கடவுளால் ஏவப்பட்டுள்ளது. போதிக்கவும்...........எல்லா வகையான நற்செயல்களையும் செய்யத் தகுதியுள்ளவனுகின்றான்.'' (2 தீமோ, 3, 15) ''முற்காலத்தில் எழுதப்பட்ட மறை நூல் வாக்குகள் நமக்குப் போதனையாகவே எழுதப்பட்டன. மறை நூல் தரும் பொறுமையினுலும், ஆறுதலினுலும், நமக்கு நம்பிக்கை உண்டாக வேண்டும் என்பதே அவற்றின் நோக்கம்,'' (உரோ 15, 14) என்று புனித சின்னப்பர் கூறுகின்றார்.

''திருச்சட்டம் மோயீசன் வழியாக அளிக்கப்பெற்றது. ஆனுல் அருளும் உண்மையும் இயேசுக்கிறீஸ்து வழியாக வந்தன,'' (அரு 1, 17) ''நாங்கள் அறிவிப்பது உயிரின் வார்த்தையைப் பற்றியது.................நாங்கள் பார்த்ததை, நாங்கள் கேட்டதை உங்களுக்கும் தெரிவிக்கின்றோம்.'' (1 அரு 1, 2). மேற்கூறிய கருத்துக்களனைத்தையும், முழுத்திருச்சபையின் எண்ணத்தையும் ஒன்று திரட்டிக் கூறுவதுபோல, புனித எரோணிமுஸ்: 'வேதாகமத்தை அறியாதவன் கிறீஸ்துவை அறியாதவனே'' என்று மிகச்சுருக்கமாகக் கூறுகின்றார்.

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வார்த்தை மனுவுருவானார்

C. அன்ரனி, (கி. இ. தூ.) தாண்டவன்வெளி.

''வார்த்தை மனுவுருவானார்; நம்மிடையே குடி கொண்டார்'' (அரு. 1/14)

இவ்வாக்கியம் நாம் நன்கு அறிந்த தொன்று. கிறிஸ்மஸ் விழாவின் அடிப்படையே இந் நிகழ்ச்சிதான். கடவுள் மனிதனாகப் பிறந்ததையே கிறிஸ்மஸ் பண்டிகை எனக்கொண்டாடுகின்றோம். இவ்வாக்கியம் கிறிஸ்து பிறப்பு 3வது பூசையில் நற்செய்தி வாசகத்தில் வாசிக்கப்படுகிறது. திரிகால செபத்தை சொல்லும் ஒவ்வொரு முறையும் இவ்வாக்கியத்தைக் கூறுகிறோம்.

'வார்த்தை மனுவுருவானார் நம்மிடையே குடி கொண்டார்' என்ற வாக்கியத்தின் பொருளை நன்கறிய பழைய ஏற்பாட்டில் ''வார்த்தை'' என்ற சொல்லின் பொருளையும், பழைய ஏற்பாட்டு நிகழ்ச்சிகளையும் அறிதல் வேண்டும் அப்போது இவ்வாக்கியத்தின் ஆழ்ந்த கருத்தை அறியமுடியும்.

''வார்த்தை'' என்பது ஒரு பொருளைக் கொண்டுள்ள ஒலியாகவே நாம் கருதுகிறோம். ஆனால் பழைய ஏற்பாட்டு மக்களுக்கு ''வார்த்தை'' என்பது ஆற்றல்மிக்க உண்மை நிலை. குறிப்பாக ஒருவர் அளிக்கும் வாக்குறுதியோ அல்லது சாபமோ கண்டிப்பாக நிகழும் என்று பழைய ஏற்பாட்டு மக்கள் நம்பினர். உதாரணமாக கண் தெரியாத ஈசாக்கு ஏசாயு என்று எண்ணி யாக்கோப்பை ஆசீர்வதிக்கிறார். ஏசாயு வந்து ஆசீர்வதிக்கும்படி கேட்டபோதுதான் யாக்கோப்புவுக்கு அளித்த ஆசீரை திரும்பப் பெறமுடியாது என்று கூறினார். அது கண்டிப்பாக நடந்தே தீரும் என்றார். இறைவனும் இஸ்ராயேல் மக்களுக்கு தான் அளித்த வாக்குறுதி கண்டிப்பாக நிகழும் என்று கூறுகிறார்.

நமக்கு ஒரு மனிதனின் வார்த்தைகள் மனிதனின் எண்ணத்தைக் காட்டுகின்றன. பழைய ஏற்பாட்டு மக்களுக்கு மனிதன் வார்த்தை மூலம் தன்னையே வெளிப்படுத்துகிறான். கடவுளும் தமது வார்த்தைகள் மூலம் தம்மையே, தனது குணங்களையே வெளிப்படுத்துகிறார். ஆதியாகமத்தின் ஆரம்பத்திலேயே கடவுளின் வார்த்தையைப்பற்றி படிக்கிறோம். கடவுள் ஒளி உண்டாகுக என்றார் (ஆதி 1, 3); அப்படியே ஒளி உண்டாயிற்று. கடவுளின் வார்த்தை ஆற்றல் உள்ளது எல்லா பொருட்களையும் உண்டாக்கிற்று. அவரது ஆற்றலை, அறிவை காட்டுகின்றன. உண்டாக்கப்பட்ட பொருட்களின் மூலம் தமது குணங்களை வெளிப்படுத்துகிறார். கடவுளின் வார்த்தை படைப்பின் மூலம் மட்டும் வெளிப்படவில்லை. கடவுளின் வார்த்தை முன்னறிவிப்பவர் வார்த்தையாகவும் மோயிசனின் சட்டமாகவும் வெளிப்பட்டது. இறைவாக்கினர் யாவேயின் பிரதிநிதிகளாகப் பேசினர். யாவேயின் வார்த்தைகளைக்கூறினர். இவர்கள் கடவுளின் வாக்குறுதியை, வரவிருக்கும் தண்



டனையை எடுத்துக்காட்டி உலகை ஆள்பவர் என்பதை காட்டினர், தமது வார்த்தையின் மூலம் நல்லவர்களை வாழ்வித்துத் தீயவர்களைத் தண்டித்தார் நீதியுள்ள கடவுள் என்பதை நிரூபித்தனர்.

கடவுளின் வார்த்தை யூத மக்களுக்கு வெளிப்படுத்தப்''-டது. ஆனால் அவர்கள் அதை ஏற்கவில்லை.

இறுதியாக கடவுளின் வார்த்தை முழுமையாக வெளிப்பட்டது. வார்த்தை மனுவுருவானார். இதை பழைய மொழிபெயர்ப்பில் 'மாமிசமானார்' என்று வாசிக்கிறோம். மாமிசம் என்பது விவிலிய வழக்குப்படி எளிமையை பலமின்மையைக் குறிக்கும். 'கடவுள் மனுவிருவானார்' என்பதின் பொருள். ''ஆற்

[9ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## வார்த்தை மனுவுரு...

(8ம் பக்கத் தொடர்ச்சி)

றல் மிக்க கடவுள் எளிய பலமற்ற உருவ மெடுத்தார்'' என்பதே.

கிறீஸ்து மனிதனுகப் பிறந்ததின் மேல் கடவுளின் வெளிப்பாடு தெளிவாகின்றது, முழுமை அடைகின்றது. தம் மகன் மனிதனுகப் பிறந்ததின் மூலம் கடவுள் தம்மையே வெளிப்படுத்துகிருர்; புனித சின்னப்பர் கிறிஸ்துவை ''கட்புலனுக கடவுளின் சாயல்'' என்கிருர். கிறீஸ்து நாதரே, ''என்னைக் கண்டவன் தந்தையைக் கண்டான்'' என்று கூறுகிருர். படைப்பின் மூலம் வெளிப்பட்ட கடவுளின் வார்த்தையோ, அன்றி, தீர்க்கதரிசியின் வார்த்தையோ கிறிஸ்துவைப் போல் கடவுளை வெளிப்படுத்தவில்லை. கிறிஸ்துவின் வழியாகத்தான் மக்கள் கடவுளை நன்கு அறிய முடியும்.

''நம்மிடையே குடிகொண்டார்.' பழைய ஏற்பாட்டுக்காலத்தில், குறிப்பாக யூத மக்கள் பாலைவனத்தில் வாழ்ந்தபோது, கடவுள் அவர்கள் மத்தியில் வாக்குத்தத்தத்தின் பெட்டகம் இருந்த கூடாரத்தில் குடியிருந்தார். சலமோன் வாக்குத்தத்தத்தின் பெட்டகத்தை தான் கட்டிய எருசலேம் தேவாலயத்திற்கு மாற்றியபொழுது கடவுள் எருசலேமில் குடியிருந்தார். பபிலோனியரால் எருசலேயம் அழிக்கப்பட்டபொழுது கடவுளும் யூத மக்களிடையே வாழவில்லை. ஆனுல் எசேக்கியேல் தீர்க்கதரிசி கடவுள் மீண்டும் அவர்களிடையே குடியிருப்பார் என்று கூறிஞர்.

எசேக்கியேல் தீர்க்கதரிசி கூறியபடியே கிறிஸ்துநாதர் நம்மிடையே குடிகொண்டார். கடவுளின் வெளிப்பாடு கிறிஸ்துவின் வழியாக மனித உருக்கொண்டது. கடவுள் கிறிஸ்து மூலம் முழுமையாகத் தம்மை வெளிப்படுத்திஞர். அப்போஸ்தலர்களின் சான்று மூலம் நாம் கடவுளைக் கிறிஸ்து வழியாகக் காண்கிறேம். அவர் அருளும் உண்மையும் நிறைந்து இருந்தார் (அரு. 1, 15). தம்மையே நமக்கு அர்ப்பணித்ததின்மூலம் கிறிஸ்துநாதர் கடவுளின் வாழ்வை மனிதனுக்கு அளிக்கவந்தார் என்றுஏற்றுக்கொள்கிறேம். புனிதஅருளப்பர் கூறுவதுபோல், அவர் தமது பெயரில் விசுவாசம் வைத்துத் தம்மை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு கடவுளின் மக்களாகும் உரிமையை அளித்தார். நாம் கிறிஸ்துவின் பிறப்போடு புத்துயிர் பெற்று, நாமும் இறைவனின் மக்கள் என்பதை உணர்ந்து, இவ்விழாவைக் கொண்டாடுவோம்.

## "புரட்சிக் கிறிஸ்து..."

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல் ''நானே வழியும், வரழ்வும், வாய்மையுமாய் இருக்கிறேன்'' என்று கூறி ''என் பின்னே வா'' என அழைத்துத் தான் காட்டிய புரட்சிப் பாதையில் வாழ்ந்த கிறிஸ்து, தான் காட்டிய வழி, வாழக்கூடிய வழி தான் என்பதைத் தன் வாழ்க்கையின் மூலம் நிரூபித்துக் காட்டிஞர். என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

கிறிஸ்துவின் புரட்சி இலகுவான புரட்சியல்ல. பிறபுரட்சிகளைப்போல ஓரிரு வாரங்கள் மாதங்கள் ஆண்டுகளில் முடியும் புரட்சியுமல்ல. ஆனுல், வாழ்க்கை முழுவதும் நிலைக்கும் துன்பமான புரட்சி. எனினும் ''அத்துன்பத்துக்குப் புதுக்கருத்தும், மெருகும், பொருளும் கொடுக்கிருர்'' கிறிஸ்து. ''வாழ்க்கையின் இன்ப நாதம் இரண்டு கம்பிகளின் இனிய கானத்தால் ஏற்படுவதே: ஒன்று அன்பு; மற்றுென்று தொண்டு. அன்பிலே இருந்து மலர்வதுதான் தொண்டு,'' என்று விளக்கும் ஆசிரியர், இந்த விளக்கத்திற்குக் கிறிஸ்துவின் வார்த்தைகளையும் செய்கைகளையும் ஆதாரமாக எடுத்துக்காட்டியுள்ளார். இவ்வாருக, வாழ்க்கையெனும் சிலுவையை அன்பெனும் வலிமை கொண்டு தாங்கி இன்பத்தை-திருப்தியை அடைய வழி காட்டும் கிறிஸ்து இன்றும், என்றும் எம்மிடையே ஊக்கமும், மனத்திடமும் அளிப்பவராக வாழ்ந்து கொண்டிருக்கிருர் என்பதையும் எமக்கு வலியுறுத்த மறக்கவில்லை, இந்நூலின் ஆசிரியர்.

உலகைத் திருத்துவதைவிட உள்ளத்தைத் திருத்துவதுதான் பெரிய புரட்சி என்று நிரூபித்து, இது மட்டும் நடந்தால் உலகிற் கத்தியின்றி, இரத்தமின்றிக் கூக்குரலின்றி ஒரு திருப்பம் ஏற்பட்டு, மனிதகுலம் முழுமையும், திருப்தியும் அடையும் என்று எடுத்துரைக்கும் ''புரட்சிக் கிறிஸ்து'' இளைஞருக்குக் குறிப்பாக எழுதப்பட்டாலும், எவரும் கிறிஸ்துவில் ஆழ்ந்த சமாதானம் அடைய வழி காட்டும் நூலாக உளது. ★

---

**"நன்மைகளால் நிறைந்துள்ள நெஞ்சங்களே-இன்று நன்றி கூறும் உணர்வாலே மகிழுங்களே."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்னையின் பரிசு

அமைதியான இரவு, எல்லோரும் உறங்கிக்கொண்டிருக்கும் நேரம். இரவு 11 மணி. இச்சமயம் அந்த அமைதியை கலைத்துக் கொண்டு ஒலித்தது மாதா கோயில் மணி யோசை. அன்று மார்கழி 24. கிறீஸ்து பிறப்பு விழாத் திருப்பலி தொடங்கவிருக்கின்றது என்பதனை அறிவிக்கும் ஓசை அது.

சாந்தி எழுந்து தன் கணவன் கிருபையை திருப்பலிக்குச் செல்ல எழுப்பினுள். சிறிது நேரத்தில் தங்களை அலங்கரித்துக்கொண்டு, உடல் நடுக்கஞ் செய்யும் அக்குளிரில் இருவரும் விரைவாகக் கோயில் நோக்கிப் புறப்பட்டனர்.

சாந்திக்கும், கிருபைக்கும் மணமாகிப் பத்து ஆண்டுகள் ஆகிவிட்டன. கிருபை ஓர் பட்டதாரி, சாந்தி G. C. E. வரை பயின்றவள். கிருபையின் வருவாயே குடும்பத்தின் வரவு செலவுக்குப் போதுமானதாகிவிட்டது. மணவாழ்க்கையில் அவர்களுக்குக் கிடைக்கப் பெருத இன்பம் குழந்தை இல்லாமைதான். மருத்துவர்கள் கைவிட்டுவிட்டார்கள். எனவே மாதாவைத்தான் அவர்கள் நம்பினுர்கள். சாந்தி ஒவ்வொரு ஆண்டும் கிறீஸ்து பிறப்பு விழாவின்போது மாதாவிடம் கூறுவாள்: ''அன்னையே, நீ ஓர் குழந்தையைப் பெற்று அன்னையாக மாறி, அம்மாவென்று அழைக்கப்படும் பேறு பெற்ருயே. எனக்கும் அந்தப் பேறு கிடைக்கச் செய்யக்கூடாதா?'' கேட்டதோடு மட்டுமல்ல, ''அன்னை தருவாள் எனக்கொரு மகவை,'' என்றும் நம்பினுள்.

J. J. இம்மானுவேல்
குருமடம், திருச்சி.

எத்தனையோ முறை சாந்தியின் உள்ளக் குமுறல்களைக் கண்ட கிருபை ''நாம் ஒரு குழந்தையை தத்தெடுத்துக்கொண்டால் என்ன?'' என்று கேட்டிருக்கின்ருன். சாந்தி ஏனே விரும்பவில்லை.

பாலகயேசு பிறந்து விட்டார், இரவுத் திருப்பலி முடிந்துவிட்டது. சாந்தி, பாலன் குடில் இருந்த பக்கமாகச் சென்ருள். அங்கே குடிலைச்சுற்றி பக்தியோடு செபிப்பவர்கள் மட்டுமல்ல, உள்ளப்பூரிப்பால் துள்ளி விளையாடும் சிறுவர் சிறுமியரையும், அவர்களோடு சேர்ந்து இன்புறும் பெற்ருேரையும்கண்டாள். அன்னையின் குழந்தையைக்கண்டு இன்புறும் மக்களுக்கு நடுவே அவள் கண்ணீர் சிந்திக் கொண்டு நின்ருள். அவள் எவ்வளவு நேரம் அப்படி நின்றுகொண்டிருந்தாளோ தெரியாது. அவள் கண்விழித்தபோது அவளைச் சுற்றி, முன் நின்றிருந்தவர்களில் யாருமே இல்லை. எனவே தன் கணவர் வெளியே தனக்காகக் காத்துக்கொண்டு இருப்பார் என்று எண்ணியவளாக தன்னுடன் கொண்டுவந்த பட்டுச் சட்டையைப்பாலனின் பாதத்திலே வைத்தாள். அச்சமயம் ஏதோ குழந்தை அழும் குரல் கேட்டு பின்புறம் திரும்பினுள் சாந்தி. அங்கே ஒரு பெண் பால்மணம் மாருத ஒரு பச்சிளம் குழந்தையுடன் நின்றுகொண்டிருந்தாள். அக்குழந்தையின் குளிரைப் போக்க அதன் உடலில் ஓர் சிறு ஆடையே இல்லை.

அக்குழந்தையின் தாய் மேரி. இறை மகனை ஈன்ற அன்னையின் நாமத்தை பெற்ற மேரி அங்கே தன் பாவத்திற்காக இறை மகனைப் பார்த்து அழுதுகொண்டிருக்கின்ருள். அன்னை மரி கன்னியாக, புனிதத்தின் உருவமான மகனுடன் இருக்கின்ருள். ஆனுல் மேரியோ தன் பாவ வாழ்க்கையின் அடையாளமாக ஒரு மகனைத்தன் கையில் வைத்துக்கொண்டு நிற்கின்ருள். ஆனுல். மேரியின் குழந்தையோ குளிர் தாங்க முடியாமல் அழுது கொண்டே இருக்கின்றது.

சாந்தி தன் கையிலிருந்த பட்டுச்சட்டையை குடிலில் இருந்த பாலனின் பாதத்தில் வைத்துவிட்டு திரும்புகின்ருள். மேரியையும் அவள் குழந்தையையும் காண்கின்ருள். அவள் உள்ளம் மேரிக்காக இரக்கப்படவில்லை. மாருக ''இன்னுமா இவள் மானமின்றி வாழ்ந்துகொண்டு இருக்கின்ருள்'' என அவள் வாய் முணு முணுத்தது.

சாந்தியின் வருகைக்காகக் காத்திருந்த கிருபை அவளை அழைத்துக்கொண்டு பங்குத்

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சிறுகதை

# காணிக்கை

—★—

திரு. பி ஏ. சி. ஆனந்தராசா
சென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

அன்று மார்கழி 25; யேசு பிறந்தபுனித தினம். யாழ்ப்பாண மாதா கோவிலில் ''நடுச் சாமப் பூசை முடிந்து வெளிவந்த மக்கள் அந்த மார்கழிப்பனிக்குளிரிலும் குதூகலமாயிருந்தனர். புத்தாடை அணிந்த சிறுவர்கள், வாலிபர்கள், இளநங்கைகள், முதியவர்கள்.... இப்படி எல்லோர் மனத்திலும் மகிழ்ச்சிதான்! கைகளைக்குலுக்கி வாழ்த்துக்கள் பரிமாறிக் கொண்டார்கள்!! கயிறுகள் தொங்கிக் கொண்டிருந்த மணிக்கூட்டுக்கோபுரத்தின் கீழ், தனிமையாக நின்று, இந்தக்கரைபுரண்டோடும் மகிழ்ச்சிப்பிரவாகங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு நின்ற அருளானந்தத்திற்கு பெருமூச்சு வருவானேன்? தான் வாழும் தனிமை வாழ்க்கையின் சுமை அன்று அவர் இதயத்தை இறுக்கிப்பிழிந்தது!! 15 வருடங்களுக்கு முன்மனைவியைப்பறிகொடுத்த 54 வயதான அருளானந்தருக்கு ஒரே ஒரு மகள்; அவளும் ஒரு மடத்தில் கன்னியாஸ்திரியாக வாழ்கிறாள். தனிமரமாகி விட்டார் இந்த மனிதன்.

காணிக்கை செலுத்த திவ்விய பாலனுக்குமுன் போய் நின்றார். அவரைப்பார்த்து புன்னகை பூத்தார் யேசு பாலன்!! கோயிலுக்கு வெளியே சாடையான மழைத்தூறல். சால்வையை எடுத்துத்தலையில் போட்டுக் கொண்டு, கடைவீதியிலிருந்த தமது கடையை நோக்கி விரைந்தார் அருளானந்தர். அவருடைய கடையில் அந்த வாரம் நல்ல வியாபாரம். வேதப்புத்தகங்கள், விளையாட்டுச் சாமான்கள், பாலன்குடில்கள், நத்தார் வாழ்த்து மடல்கள், பட்டாசுகள், பலூன்கள்........ இப்படி ஏராளம் அவர் கடையில். பொருள்களை வாங்க வரும் பிள்ளைகளைப் பார்த்து பரவசம் அடையும் அவருடைய மனம். ஆனால் வியாபாரத்தில் வந்து போகிறவர்கள் வாழ்க்கை முழுவதும் வந்து போவார்களா? கடையைத் திறந்து, விளக்கேற்றி விட்டு, ஒரு சூடான ''கோப்பியை'' ''போட்டுக்குடித்துவிட்டு, சுருட்டைப்பற்றி வாயில் வைத்துக்கொண்டு சிந்தனையில் ஆழ்ந்தார் அருளானர்ந்தர். '' இந்தச் சந்தோசமான இரவில் எனக்கு நந்தார் சோபனம் சொல்லக்கூட ஒரு சீவனில்லை! என்ன சீவியம்?'' என்றெண்ணிப் பெருமூச்சுவிட்டார் அவர். எரிந்து முடிந்த சுருட்டை வெளியே எறிய எழுந்த அருளானந்தர், கடைக்கதவினூடாக ஓர் உருவம், தன்னையே பார்த்துக்கொண்டு நிற்பதைக்கண்டு சற்றுப்பயந்துபோனார். பத்து வயது நிரம்பாத ஒரு பையன் அங்கு நின்று கொண்டிருந்தான். கபடமில்லாத அவனுடைய கண்கள், ஆவலோடு அந்தக் கடைப் பொருட்களைப் பார்த்துக்கொண்டிருந்தன. காலில் செருப்பில்லை. தோய்த்த வெள்ளைச் சேட்டையும் மஞ்சள் ''கால்சட்டையையும்' அணிந்து வந்து நின்ற அந்தப் பையனைப் பார்த்து, ''என்ன மகன்? என்ன வேணும்? உனக்கு? இந்த நேரத்தில் வந்து நிற்கிறாய்?'' ''ஐயா, என் பெற்றோர்களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்க, ஏதாவது உங்கள் கடையில் இருக்கா?' 'என்ன, உன் பெற்றோர்களுக்கா?' பெரியவருக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை! பெற்றோர்களல்லவா பிள்ளைகளுக்கு வாங்கிக் கொடுப்பார்கள்'' என்றெண்ணினார் அருளானந்தர். ''அது சரி, உன் பெற்றோர்கள் எங்கிருக்கிறார்கள்? உன் ஐயாவிற்கு என்னவேலை? உன் பெயர் என்ன?'' என்று கேள்விகளைத் தொடுத்தார் அருளானந்தர். ''என் பெயர் சூசைநாதன், அப்பாபெயர் தம்பிப்பிள்ளை ஐயா என்றான் அந்தப் பையன். ''என்ன? தம்பிப்பிள்ளை ஆசிரியரா உன் தகப்பன்? அடுத்த தெருவில் இருக்கிறாரே, அவரா?'' 'ஓம் ஐயா' என்றான் சூசைநாதன் சற்றுத்தயங்கிய வண்ணம். சந்தேகத்தோடு நெற்றியைச் சுளித்தார் அருளானந்தர். சூசைநாதனுங்கு அவர் சந்தேகம் புரிந்துவிட்டது. அவன் நெஞ்சை ஏதோ சுருக்கிட்டு இழுத்தது. '' அது சரி; அவருக்கு இரண்டு பிள்ளைகள்தானே ........'' என்று அருளானந்தர் முடிக்குமுன் ''ஐயா, நான் அவர் சொந்தப்பிள்ளையில்லை. வளர்ப்புப்பிள்ளை'', என்றான் சூசைநாதன். அவனுக்கு அவர் முகத்தைப் பார்க்கக் கூச்சமா

(12ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## காணிக்கை...

[11ம் பக்கத் தொடர்ச்சி]

யிருந்தது. மடைத்தனமான கேள்வியைக் கேட்டுவிட்டோமே என்று மனவருத்தப்பட்டார், அருளானந்தர். ''அது சரி அப்பு. அன்பளிப்பு வேணும் என்றுயே. உனக்கு எது வேணும்?'' என்று கேள்வியை வேறு திசை திருப்பினுர் அருளானந்தர். சூசைநாதன் சுற்றிப்பார்த்தான். அழகான பாலன் குடிலில் போய் அவன் கண்கள் பதிந்தன. பெரிய அழகான சுரூபங்கள், இடையர்கள், ஆடு மாடுகள், மூவிராசாக்கள்............பையன் பலமாக யோசித்தான். தன்னை வளர்ப்பவரோ ஏழைச்சட்டம்பியார். அவருடைய பிள்ளைகள் சில நாட்களாக, '' அப்பா, அப்பா எங்களுக்கு பாலன் குடிலை '' என்று அவரை ''அரியண்டப்'' படுத்தியது, சூசைநாதனின் நினைவுக்கு வந்தது. ''இதை வாங்கிக்கொடுத்தால், தன் ''சகோதரங்களுக்கும்'' சந்தோசமாயிருக்கும் என்று எண்ணினுன், சூசைநாதன். அவன் கற்கும் தச்சுத்தொழில் நிலையத்தில் அவனுக்குக்கிடைத்த சிறு ஊதியப் பணம் அவன் பையில் கிடந்தது. அந்தப் பெரிய குடிலைக்காட்டி, ''ஐயா இது என்ன விலை?'' என்றுன் அவன். அவன் பையில் ரூபா 4/75 தானிருந்தது. 'ஓ! அதன் விலையா? கொஞ்சம்தான். வேணுமா? சொல்லு?'' என்றுர் பெரியவர். பையன் ஒன்றும் பேசாமல் இருந்தான். ''சும்மா சொல்லு வாங்கப் போறியா?'' சூசைநாதன் தயங்கினுன். ''ஐயா என்னிடம் ரூபா 4/75 தானிருக்கிறது'', என்று இழுத்தான். அருளானந்தர் ஒன்றுமே பேசவில்லை. உடனே எழுந்து அந்தக் கிடிலை எடுத்து, பெரிய '' பிரவுண் '' தாளில் வைத்து அழகாகப் பார்சல் பண்ணினுர். ''இந்தா மகன்; இந்த அன்பளிப்பை கொண்டுபோய்க்கொடு'' என்று சூசைநாதனிடம் கொடுத்தார். சூசைநாதன் அந்த ரூபாய் 4/75 க்கொடுத்துவிட்டு, '' மிச்சம் பெரிய உபகாரம் ஐயா'' என்று சொல்லிவிட்டுச் சென்றுன். அவனுக்குத்தெரியுமா, அந்தக்குடிலின் விலை ரூபாய் 38/- என்று?

கதவைப்பூட்டிவிட்டு சாக்குக் கட்டிலில் சாய்ந்தார், அருளானந்தர். நெஞ்சிலிருந்து ஏதோ பெரிய சுமை குறைந்தது போன்றிருந்தது அவருக்கு!

அடுத்தநாள். ஆசிரியர் தம்பிப்பிள்ளை அந்தக்குடில் பார்சலுடன் கடைக்குள் நுழைந்தார். ''அருளானந்தம், இதை அந்தப் பையனுக்கு விற்றீரா?'' என்று கேட்டார் தம்பிப்பிள்ளை. ''ஓம் ஐயா; நான்தான் விற்றேன். ஏன்?''. ஆசிரியர் ஆச்சரியமடைந்தார். ''என்ன விலைக்கு விற்றீர்?'' ''உமது மகன் கொடுத்த விலை ரூபாய் 4/75. சரிதானே.'' ''என்ன 4/75? என்றுல் நம்பமுடியவில்லை, அருள். இது பெரிய குடிலாயிற்றே!'' என்றுர், ஆசிரியர். அருளானந்தருக்கு சிரிப்புத்தான் வந்தது. ''ஐயா ஆசிரியரே, இந்த உலகத்தில் எத்தனையோ விசயங்கள் நம்ப முடியாமல்தான் இருக்கின்றன. இதற்கு விலை கேட்கிறீர். உண்மை அன்பிற்கு உம்மால் விலை சொல்ல முடியுமா?'' கடைக்காரர் அருளானந்தம் இப்படி வேதாந்தம் பேசுவதைப் பார்க்க ஆசிரியருக்கு வியப்பாயிருந்தது.

அருளானந்தம் மேலும் தொடர்ந்தார், ''ஐயா சூசைநாதன் இருக்கிறுனே? அவன் உமக்குப் புறத்திப்பிள்ளையில்லை; சொந்தப் பிள்ளை! அந்தக்குடிலை யாருக்கு வாங்கினுன் தெரியுமா? உமக்குத்தான். ஆசிரியர் தம்பிப்பிள்ளைக்கு நெஞ்சிலிருந்து ஏதோ விம்மி எழுந்து தொண்டையை வந்து அடைப்பதைப் போலிருந்தது. ''அருளானந்தம் சொந்தப் பிள்ளையைப்போல்தான் நான் அவனை வளர்த்து வருகிறேன்! உமக்குத்தெரியுமா? 10 வருடங்களுக்கு முன் அவனை ஆஸ்பத்திரியில் பெற்றுவிட்டு தாய் எங்கேயோ போய் விட்டாள்! யாரும் அற்ற அந்த அனுதைக் குழந்தைதான் இவன்.''

''இறைவன் இந்தப் பாசங்களை எப்படியெல்லாம் கொட்டி வளர்க்கிறுன் பார்த்தீரா, தம்பிப்பிள்ளை?''.

''சரி அதிருக்கட்டும். குடிலின் விலையைச் சொல்லும். மிச்சப்பணம் வேண்டாமா?'' ''எனக்கு ஒன்றுமே வேண்டாம், ஆசிரியரே. கொண்டுபோய் அந்தக்குடிலை அவனிடம் கொடுங்கள் பாவம், நொந்துபோயிருப்பான் இது அவனுக்கு என் காணிக்கை. போய் வாருங்கள்.''

ஆசிரியர் ஒன்றுமே பேசவில்லை. மௌனமாக அந்தப் ''பார்சலை'' கையில் எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச்சென்றுர்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறீஸ்து வருவார்

ஆண்டாண்டு தோறும் அவனியில் மானிடர் அகமகிழ்ந்து சிறப்பிக்கும் பெருவிழா; உலகினர்க்கோர் உண்மை விழா; உத்தம கிறிஸ்தவர்களுக்கு இது ஓர் அருள் விழா. அது என்ன? அதுவே "கிறிஸ்து பிறப்பு விழா"

கிறீஸ்துவின் பிறப்பு விழாவினைக் கொண்டாடி மகிழும் கிறீஸ்தவர் அனைவரும் கிறீஸ்துவின் பிறப்பை மட்டும் கொண்டாடி மகிழ்வதில் அர்த்தமில்லை. ஆனால் இவ்விழாவினுள் மறைந்துள்ள ஓர் உண்மையை எதிர்நோக்கிக் கொண்டாடுவதில்தான் மகிழ்ச்சி உள்ளது என்பதை ஒவ்வொரு கிறீஸ்தவரும் உணர வேண்டும். இந்த உண்மை நம்மவர்க்குத் திருவருகைக் காலத்தில் போதிக்கப்படுகிறது. அந்த உண்மைதான் என்ன?

"கிறீஸ்து வருவார்". இதுவே அந்த உண்மை. விசுவாசம் அற்ற மனிதர் நம்ப முடியாத மாமெரும் உண்மை. கிறீஸ்தவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கவேண்டிய மறை உண்மை. இதனை நாம் "கிறீஸ்துவின் இரண்டாம் வருகை" என்போம். கிறீஸ்துவின் முதல் வருகையை நினைவு படுத்திக் கொண்டாடி மகிழும் கிறீஸ்தவர்கள் அனைவரும், மனதில் இருத்திச் சிந்திக்கவேண்டிய ஞான உண்மை.

அன்று பிறப்பால் (குழந்தையாய்) கிறீஸ்து வந்தார். இது நடந்த உண்மை. இனி வரப்போகிறார். இது நாம் எதிர்பார்க்கும் உண்மை. நடந்து முடிந்த உண்மையைக் கொண்டு நடைபெறவிருக்கும் உண்மையை விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் எதிர்நோக்குவோம்.

இதை எப்படி ஏற்றுக்கொள்வது. இது உண்மைதானோ? அல்லது திருச்சபையின் வீண் விரட்டல்தானோ? எனப் பலர் எண்ணி விடலாம். அல்லது அக்கறையின்றிக் காலத்தைப் போக்கி விடலாம் அதனால்தான், அன்பர்களுக்கு இந்தப் போதனை பொய்ப்பிரச்சாரம் அல்ல, இதில் உண்மை உண்டு எனக்காட்ட, விவிலியத்தின் மூலம், அதாவது, கடவுளின் ஏவுதலால் எழுதப்பெற்ற அவரது திருநூலின் துணைகொண்டு இவண் சான்றுகள் தந்து விளக்குவோம்.

1. <u>கிறீஸ்து திரும்பவும் வருவார் என்பதற்கு அத்தாட்சி:</u>

"கலிலேயரே! ஏன் இப்படி வானத்தைப் பார்த்துக்கொண்டே நிற்கிறீர்கள்? உங்கள் நடுவிலிருந்து வானகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பெற்ற இந்த இயேசு எவ்வாறு வானகம் செல்லக்கண்டீர்களோ, அவ்வாறே மீண்டும் வருவார்" (அப் பணி. 1 : 11) என்று தேவதூதர்களால் கூறப்பட்டிருக்கிறது. "இதோ அவர் மேகங்கள் சூழ வருகிறார். அனைவரும் அவரைக்காண்பர்" (திரு. வெளி 1:7) எனப் புனித அருளப்பர் கூறுகிறார். "நம்முடைய தேவன் வருவார்" (சங். 50 : 3) என்று அரசனாகிய தாவீது கூறியிருக்கிறார். 'நமக்கோ வானகமே தாய் நாடு. அங்கிருந்து மீட்பர் வருவாரெனக் காத்திருக்கிறோம். ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்வே அந்த மீட்பர்" (பிலிப். 3 :20) என்று புனித சின்னப்பர் கூறியிருக்கிறார். "நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்தபின் திரும்பிவந்து உங்களை என்னிடம் அழைத்துக்கொள்வேன்" (அரு. 14 : 3) என்று கிறீஸ்துவே கூறியிருக்கிறார். இவையெல்லாம் கிறீஸ்து மீண்டும் வருவார் என்பதற்கு வேத நூல் தரும் சான்றுகளல்லவோ.

2. <u>கிறீஸ்து மீண்டும் வருவார்: எப்போது?</u>

"அந் நாளோ, நாழிகையோ ஒருவனுக்கும் தெரியாது. நந்தைக்குத் தெரியுமேஅன்றி வானதூதருக்குங்கூடத்தெரியாது(மத்24;85) என்றும், "நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் வருவார்" (மத். 24 : 44) என்றும்


## B. விக்ரர் ஜெயசீலன்

வாழைச்சேனை.


கிறீஸ்துவே கூறியிருக்கிறார். "ஆண்டவரது நாள் வந்தே தீரும். அது திருடனைப்போல் வரும்" (2 இரா. 3:10) என்று புனித இராயப்பர் கூறியிருக்கிறார். இவை கிறீஸ்துவின் வருகையைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது என்பதற்குச் சான்றுகளாகும்.

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறீஸ்து வருவார்...

[13ம் பக்கத் தொடர்ச்சி]

### 3. கிறீஸ்துவின் வருகை அண்மித்துள்ளது:

கள்ளக் கிறீஸ்த்துக்களும், கள்ளத் தீர்க்க தரிசிகளும் தோன்றிக் கூடுமானால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்களேயும் ஏமாற்றக் கூடிய அருங்குறிகளேயும், அற்புதங்களேயும் செய்யும் காலமாயிருப்பதால் (மாற். 13 : 22), இறை அரசைப்பற்றிய நற்செய்தி எல்லா இனங்க ளுக்கும் சான்ருக உலக முழுவதும் அறிவிக் கப்படுவதால் (மத். 24 : 14), மனிதர்கள் அன்பில்லாதவர்களாயும், அவதூறு செய்கிற வர்களாயும் இச்சையடக்கம் இல்லாதவர்க ளாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல் லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிக ளாயும், சுகபோக பிரியராயும், தேவ பக்தி யின் வேடத்தைத் தரித்துக்கொண்டு அதன் பலனே மறுதலிக்கிறவர்களாயும் இருப்பதால் (1 திமோ. 3 :3 - 5), பிள்ளேகள் அகந்தை யுள்ளவர்களாயும், பழித்துப் பேசுபவராயும், பெற்றேருக்கு அடங்காதவராயும், நன்றி யற்றவர்களாயும், தூய்மை அற்றவர்களாயும் இருப்பதால் (2 திமோ 3 : 2), கிறீஸ்துவின் வருகை அண்மித்துள்ளது.

### 4. கிறீஸ்துவின் வருகை எவ்விதமிருக்கும்?

அனேவரும் அவரைக் காண்பர் (திருவெளி 1 : 7), அதிதூதரின் குரலொலியும் கடவுளின் எக்காளமும் அடையாளமாக முழங்க' ஆண் டவர்தாமே வானிலிருந்து இறங்கி வருவார் (1 தெச. 4 : 16), மின்னல் கிழக்கில் தோன்றி மேற்கு வரை தெரிவது போலவே மனுமகன் வருகையும் இருக்கும் (மத். 24:27), அவர் வரும்போது விலேமிக்க தூய வெண்ணுடை அணிந்த விண்ணகப்படைகள் அவரைப் பின் தொடரும். (திருவெளி. 19:14) இவை மூலம் கிறீஸ்துவின் வருகை எவ்விதமிருக்கும் என் பதை நாம் உணர முடிகிறது.

### 5. கிறீஸ்து வந்தவுடன் சம்பவிப்பது என்ன?

கிறீஸ்துவுக்குள் இறந்தோர் முதலில் உயிர்த்தெழுவர் (1 தெச. 4:16). அதன்பின் உயிரோடு எஞ்சி நிற்கும் நாம் அவர்களோடு கூட ஒன்ருய் மேகங்கள் மீது தூக்கிச்செல்லப் பட்டு வான்வெளியில் ஆண்டவரை எதிர் கொள்ளப்போவோம். போய் ஆண்டவரோடு எப்போதும் இருப்போம். (1 தெச. 4 : 17)

### 6. கிறீஸ்து வரத் தாமதிப்பதேன்?

கிறீஸ்து இன்னும் ஏன் வரவில்லே? அவர் தாமதிக்கக் காரணம் என்ன? ஆம், ஆண்டவர் தம் வாக்குறுதியை நிறைவேற்றக் காலம் தாழ்த்துவதாகச் சிலருக்குத் தோன்றுகிறது. ஆனல் அவர் காலந்தாழ்த்துவதில்லே. நம் பொருட்டுப் பொறுமையாய் இருக்கிருர். ஒருவரும் அழிவுறக்கூடாது. எல்லாரும் மனந் திரும்பவேண்டும். என்றிருக்கிருர். (2 இரா. 3:9) இதுவே தாமதிப்பதின் காரணமாகும்.

### 7. கிறீஸ்து வரும்போது நமது இயல்பு எப் படி இருக்கவேண்டும்.

கிறீஸ்து வருவார் என்ற உண்மையை அறிந்து கொண்டு நாம் அவர் வரும்போது நமது இயல்பு எப்படி இருக்கவேண்டும் என் பதையும் வேதாகமம் தரும் அறிவுரையின் படி அறிந்து கொள்வோம். அவர் மீது நம் பிக்கையுடையோரையும், அவர் குற்றமற்றவ ராய் இருப்பது போல் நாமும் குற்றமற்றவ ராயிருக்கவேண்டும் (1 அரு. 3 : 3). நம்மை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளே அறிவிப்பது நம் பணி எனக்கொண்டு, இறைவனல் தேர்ந் தெடுக்கப்பட்ட இனமாயும், அரச குருத்துவ திருக்கூட்டமாயும், பரிசுத்த குலமாயும், இறை வனுக்குச் சொந்தமான மக்களாயும் இருக்க வேண்டும் (1 இரா. 2:9). மேலும் தலேவனின் வரவை ஆவலோடும், நம்பிக்கையோடும், விவேகத்தோடும் எதிர்பார்த்துக்கொண்டிருக் கும் உத்தமமான ஊழியக்காரனேப்போல் இருக்கவேண்டும் (மத். 24:46). கடவுளுடைய நாளுக்காகக் காத்திருக்கிற நாம் பரிசுத்த நடத்தையிலும், இறைப்பற்றிலும் எவ்வ ளவோ சிறந்து விளங்கவேண்டும். (11 இரா. 3:11,12)

### 8. கிறீஸ்துவின் வருகையின் முடிவு என்ன?

கிறீஸ்து மன்னுதி மன்னனுகவும் நீதி யுள்ள நீதிபதியாகவும், மகிமை நிறைந்தவ ராயும் பெரியதோர் அரியணே மீது வீற்றிருப் பார். அப்போது இறந்திருந்த சிறியோர், பெரியோர் அனேவரும் அரியணே முன் நிற்பர். இறந்தவர்களின் செயல்கள் 'வாழ்வு நூலில்' குறிக்கப்பட்டிருக்கும். அதில் காணப்படுவது போல் அவரவர் செயல் களுக்கேற்பத் தீர்ப் புக்கூறப்படும். அதன்பின் வாழ்ந்து கெட்டவர் நித்திய அழிவையும், கிறீஸ்துவுக்கென வாழ்ந் தவர் நித்திய வாழ்வையும் பெறுவர். (திரு. வெளி 20:11–15)

[15ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அன்னையின் பரிசு...

[10ம் பக்கத் தொடர்ச்சி]

தந்தையிடம் சென்ருன். இருவரும் பங்குத் தந்தையுடன் கிறிஸ்து பிறப்பின் வாழ்த்துக் களைப் பரிமாறிக்கொண்டனர். பங்குத்தந்தை சாந்தியின் நிலையை நன்கு அறிந்தவர். எனவே அவளுக்கு ஆறுதல் கூறி இருவரையும் ஆசீர்வதித்து அனுப்பினுர்.

மார்கழி 25ம் நாள் காலைத்திருப்பலி 9 மணிக்கு முடிந்துவிட்டது. எல்லோரும் கோவிலைவிட்டு வெளியேறிக்கொண்டிருக்கின்றனர். அச்சமயம் கோவிலுக்கு வெளியே மக்கள் ஏதோ நடக்கக்கூடாத நிகழ்ச்சி நடந்துவிட்டது போன்ற அதிர்ச்சியில் கும்பல் கும்பலாகப் பேசிக்கொண்டு நின்ருர்கள். சிலர் ஓடிச்சென்று பங்குக் குருவை அழைத்து வந்தனர். பங்குக் குருவை அழைத்துச்சென்றவர்களில் கிருபையும் இருந்தான். தன் கணவன், பங்குக் குருவைப்பின்தொடர்ந்து செல்வதைக் கண்ட சாந்தி, அவர்களை நோக்கி நடந்தாள்.

கோயில் முற்றத்தில் நின்ற மக்கள் கூட்டம் பங்குக் குருவைக் கண்டதும் வழி விட்டு நின்ருர்கள். சாந்தியும் எப்படியோ முன் வரிசைக்குச் சென்று விடுகின்ருள். அங்கே அவள் கண்ட காட்சி, அவளைக் கண் கலங்கச் செய்தது. அந்த மேரி அங்கே இறந்து கிடந்தாள். அவளை அணைத்தாற்போல் அவள் பாலகன் தூங்கிக்கொண்டிருந்தான். வைத்தியப் பரிசோதனையின் பின் மேரி மார்படைப்பால் இறந்தாள் எனத் தெரிய வந்தது. அக் குழந்தை குருவானவரிடம் கொடுக்கப்பட்டது. குருவானவரோ அக்குழந்தையைப் பிள்ளைப் பாக்கியம் அற்ற சாந்திக்கு அன்னையின் கிறிஸ்மஸ் பரிசாக அளித்தார். சாந்தி அக்குழந்தையைப் பற்றிக்கொண்டாள். பங்குத் தந்தை கிருபையிடமும், சாந்தியிடமும் ''அன்னை மரி உங்களுக்கு கிறிஸ்து பிறப்புப் பரிசாக ஓர் குழந்தையை அளித்திருக்கின்ருள்'' என்று கூறிக்கொண்டே ஒரு சட்டையைக் கொடுத்தார். அந்தச் சட்டை சாந்தி முந்தின இரவு பாலனின் பாதத்தில் வைத்த அதே பட்டுச்சட்டைதான்.

[யாவும் கற்பனை]

## கிறீஸ்து வருவார்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் வழியாகக் கிறீஸ்துவின் வருகையைப்பற்றி உணர்ந்து அதைக் கிறீஸ்து பிறப்பு விழாவின்போது நினைத்துக் கொண்டாடி மகிழக் காத்திருக்கும் அன்புக்குரியவர்களே! இத்தகைய வாக்குறுதிகளைப் பெற்றிருக்கும் நாம் உடலிலும் உள்ளத்திலும் எவ்வித மாசுமின்றி நம்மைத் தூயவர்களாக்கிக்கொள்வோமாக. கடவுளுக்கு அஞ்சிப் பரிசுத்தத்தின் முழுமையை அடைவோமாக. (2 கொரி 7:1) கடவுள் நம்மைத் தம் சினத்திற்கு ஆளாகும்படி ஏற்படுத்தவில்லை. நம் ஆண்டவராகிய இயேசுக்கிறீஸ்துவின் வழியாக மீட்பு அடையவே ஏற்படுத்தினுர். (1 தெச. 5:9)

''கிறீஸ்து வருவார்'' விழிப்பாயிருங்கள். ஏனெனில், எப்போது உங்கள் ஆண்டவர் வருவார் என்று உங்களுக்குத்தெரியாது (மத். 24 : 42). இதை உணர்ந்து நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில், நீங்கள் நினையாத நேரத்தில் மனுமகன் (கிறீஸ்து) வருவார். (மத். 24 : 44)

ஆண்டவரில் அகமகிழ்வோம் அனைவருமே வருவீரே.

## வேதாகமத்தைப்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, விசுவாசிகள் மனமகிழ்வுடன் திருவழிபாட்டின் வாயிலாகவோ, சிறப்பு அறிவுரைகள் மூலமாகவோ, வேதாகம நூல்களுடன் தொடர்புகொள்ள வேண்டும் என்பது திருச்சபையின் விருப்பம். இதற்கு உதவியளிக்கும் முகமாக இப்பொழுது எல்லா இடங்களிலும், வரவேற்கப்பட்டு, வழக்கிலிருந்து வரும், வேதாகமப் பாடங்கள், வேதாகமப் படிப்புக் குழுக்கள், வேதாகம வழிபாடு போன்ற சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். வேதாகமப்படிப்பிலுண்டாகும் மறுமலர்ச்சியிலிருந்து, இரண்டாம் வர்த்திக்கான் பொதுச்சங்கம் பெரும்பலனை எதிர்பார்க்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# "ஒளி பிறந்த நன்னாளை ஓயாது வாழ்த்துதுமே"

(பண்டிதர் க. சந்திரசேகரனார், கல்முனை)

(கட்டளைக் கவித்துறை)

1. ஆதமும் ஏவையும் ஆதியிற்
கீழ்ப்படி யாமை யெனும்
பாதகம் பாரிடை மேவிட
மக்கள் பரமிழந்து
பேதுறுங் காலை இறையெனும்
பேரொளி பெத்தலையிற்
போதக னாகுநாள் போற்றுதும்
உள்ளமாம் பூச்சொரிந்தே.

2. அணிக்கணி யாகி அகப்புறந்
தூய அன்னைமரியின்
மணிக்குடல் சேர்ந்து வயங்குநல்
வார்த்தை மனுவுருவில்
பணிக்குடல் தாங்கிப் பரத்திறை
யாட்சி பரப்புதற்காய்
கணிக்கருங் காலமா மெல்லைப்
படுநாள் களிப்புடைத்தே.

3. மாமரி யாட்கோர் மகவென
வந்து வழி திறந்து
தேமதுப் பாலொடு சேர்ந்தென
வாயுரை செய்து நின்றோன்,
தோமிலா துள்ளமுள் ளார்கள்
துதித்திடத் தோன்றுமிந்நாள்
பூமிசை யுள்ளா ரெவர்க்கு
மளிக்கும் புதுப்பரிசே.

4. சேற்றிற் புதைந்த மனுக்குலத்
தாரை இரட்சணிய
ஆற்றிற் கழுவி யகத்திருள்
நீக்கி அருளொளியாம்
பேற்றினிற் கூட்டிபே ரின்பமாம்
வீட்டின் பெறற்கரிய
நாற்றென நாசரேத் வந்தவிந்
நாட்பெரும் பேறுடைத்தே.

5. மன்னுல கோர்கள் சமாதான
மார்ந்து மகிழ்வுகொளப்
பொன்னுல கோர்கள் புதுப்பூச்
சொரிந்து புகழெடுக்கத்
தன்னருள் மேவு வருகைகாத்
தேங்குமித் தாரணியில்
மின்னுடல் மீட்புத் தரவரும்
நாளொளி மேவுகவே.

6. பாவிகட் காகப் பரமண்
டலந்துறந் தீங்கெழுந்து
ஆவினஞ் சூழ்கற் குகைமா
ளிகையாய் அகமுவந்து
தேவினஞ் சூழத் திருவுடல்
காட்டுந் தினமிதனைப்
பாவினஞ் சூட்டியாம் வாழ்த்துகம்
வம்மின் பரிவு கொண்டே.

## நத்தால், புதுவருட வாழ்த்துக்கள்.

எழுத்தாளர், பதிப்பாளர், வினியோகத்தர், சந்தாதார், வாசக நேயர்கள், ஆதரவாளர் ஆகிய அனைவருக்கும் "தொண்டன்" பெயரால் உளம் நிறைந்த நத்தால் புதுவருட வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

தொண்டன் நிர்வாகி

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில், மனேஜர் யோசேப் B. மறே S. S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1-12-72ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media